**<u>IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR</u>**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 393/2021 |
| நாள் | 14.11.2025 |
| வா.சா.1 | பழனிச்சாமி |
| வயது | 70 |
| ஊர் | கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

கிளுவ முள் வேலி இருந்தால், அதன் இருபுரமும் சுமார் 5 முதல் 7 அடி வரை விவசாயம் எதுவும் செய்யமுடியாது என்றால் சரியல்ல. கிளுவ முள்ளை அகற்றிவிட்டு கம்பிவேலி அமைத்தற்கு குறிப்பிட்ட காரணங்கள் எதுவும் உள்ளதா என்றால் வெளிநபர்கள் யாரும் அத்துமீறக்கூடாது என்பதற்காகவும், ஆடு, மாடுகள் நிலத்தில் நுழையக்கூடாது என்பதற்காக கம்பிவேலி போடப்பட்டது. வாதிகளாகிய நாங்கள் அனைவரும் பிரதிவாதிகளை அனுகி கிளுவ முள்ளை அகற்றிவிட்டு, கம்பிவேலி அமைக்க போவதாக அனுமதி கூறினோம் என்றால் சரியல்ல. சர்வே எண். 238/1—ல் தெற்கு கடைசியில் தென்வடல் 15 அடி அகலம் உள்ள கிழமேல் பாதை பிரதிவாதிகளின் நிலம் வரை இருந்தது என்றும், அந்த பாதையை விட்டுவிட்டு, மீதி இடத்திற்கு பிரதிவாதிகளுடன் சேர்ந்து கம்பிவேலி அமைப்பதாக பேசி முடித்தோம் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கிற்காக மேற்படியான பேச்சுவார்த்தைகள் எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் நடைபெறவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளும், நாங்களும் ஒப்புக்கொண்டபடி 15 அடி தடத்தை விட்டுவிட்டு வேலி அமைக்காதது குறித்து பிரதிவாதிகள் கேட்டதால், பிரதிவாதிகளுக்கும், எங்களுக்கும் இடையே

மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எங்கள் நால்வரிடமும் நிலத்தை விலைக்கு கொடுக்கும்படி மூன்றாம் நபர்களிடம் கேட்டார்கள். அந்த மூன்றாம் நபரின் பெயர் தற்போது நியாபகமில்லை. 1வது பிரதிவாதிக்கு சுமார் 75 வயது இருக்கும் என்றும், அவர் ஆட்களை வைத்து தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் 1வது பிரதிவாதி என்ன செய்து வருகிறார் என்று சாட்சியம் அளித்தது பதிவு செய்யப்பட்டது. நாங்கள் பிரதிவாதிகளிடம் பாதை ஒதுக்குவதாக ஒப்புக்கொண்டு, பின்னிட்டு பாதை ஒதுக்காமல் வேலி அமைத்தால் பிரதிவாதிகள் நீதிமன்றத்தை அனுகி பரிகாரம் கோரப்போவதாக எங்களிடம் தெரிவித்ததால் 4வது வாதி ஊராட்சி மன்ற தலைவராக இருப்பதால் அவரது செல்வாக்கை பயன்படுத்தி சின்னதாராபுரம் காவல்நிலையத்தில் நாங்கள் பொய் புகார் அளித்தோம் என்றால் சரியல்ல. சின்னதாராபுரம் காவல்நிலையத்தில் நாங்கள் புகார் கொடுத்தது பின்னிட்டு, நாங்கள் கோரியப்படி பிரதிவாதிகள் எழுதிக்கொடுக்க வேண்டும் என்று காவல்நிலையத்தில் வைத்து வற்புறுத்தினோம் என்றும், ஆனால் பிரதிவாதிகள் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்தில் பிரதிவாதிகள் பிரச்சனை செய்ய கூடாது என்பதற்காக புகார் கொடுத்தோம். பிரதிவாதிகள் எழுதிக்கொடுக்க மறுத்ததால், புகாரில் உள்ள சங்கதிகளை இவ்வழக்கில் நாங்கள் மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. அதனால் மீண்டும் எங்களுக்கு சாதகமாக ஒரு புகாரைஅளித்து, அதற்கு மனு ஏற்பு ரசீதை பெற்று இவ்வழக்கில தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனுவில் நாங்கள் எதிர்பார்த்த சாதகமான தீர்வு கிடைக்கவில்லை என்பதால், பிரதிவாதிகள்அசல் வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக, இவ்வழக்கை நான் பொய்யான சங்கதிகளை கூறி தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எங்களுடைய சொத்தையும், பிரதவாதிகளுடைய சொத்தையும் பார்வையிட்டு, அளவீடு செய்வதற்கு நீதிமன்ற ஆணையரை நியமிப்பதற்கு நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வாதிகள் நால்வரும் தாவா சொத்தை பொதுவில் அனுபவித்து வருவதாக

கூறுவது முற்றிலும் தவறு என்றால் சரியல்ல, வாதிகளாகிய நாங்கள் நால்வரும் எங்களுக்குள் தாவா சொத்தை பாகம் பிரிவினை செய்து கொண்டு தனித்தனியாக வேலி அமைத்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நாங்கள் தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றும், உட்பிரிவு மட்டும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்தவொரு காலக்கட்டத்திலும் நாங்கள் வேலி அமைப்பதிலோ அல்லது எங்களது சுவாதீனத்தில் இடையூறு செய்ததில்லை என்று சொனனால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எங்களது நிலத்தை கிரயம் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வழக்குமூலம் ஏற்படுத்துவதற்காக பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரயம் கேட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து விவரம் தவறானது என்றும், தாவா சொத்தை பொறுத்து அவசிய தரப்பினர்களை சேர்க்காததால், தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு சரியாக மதிப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாவில் நான் கோரிய பரிகாரம் சட்டப்படி எங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றும், தாவாவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.